**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண். 127/2023**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் நாள் வியாழன்கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வீரையன் | த/பெ.: | விஸ்வநாத கண்டியர் |
| கிராமம்: | குமரபுரம் கிராமம் | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | வேலை இல்லை |
| வயது: | 59 | முகவரி: | நெ.1188, சோழன் நகர், குமரபுரம் கிராமம், மன்னார்குடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 18.04.2024

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் 1ம் வாதி ஆவேன். 2ம் வாதி எனது சகோதரரி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.02.2004 | வழக்கு சொத்தை பொருத்து வாதிகள் மற்றும் பிரதிவாதியின் தகப்பனார் விஸ்வநாத கண்டியர் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் - அசல் |
| வா.சா.ஆ.2 | 23.12.2021 | வழக்கு 1வது அயிட்ட சொத்துக்கு விளக்குடி ஊராட்சி வழங்கிய வீட்டு வரி ரசீது - அசல் (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) |
| வா.சா.ஆ.3 | 29.12.2021 | வழக்கு சொத்துக்கான சிட்டா நகல் - கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | 15.11.2021 | வாதிகள் இருவரும் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பு - அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | 18.11.2021 | வாதிகள் கொடுத்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை - அசல் |

**(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.)**